

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (17.2.2026) சென்னையில், ”தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 4.0” தொடக்க விழாவில், இந்தியத் தொழில்நுட்பக் கழகம் சென்னையில் சுழற்சிப் பொருளாதார மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் சென்னைஇந்தியத் தொழில்நுட்பக் கழகம், ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையே மேற்கொள்ளப்பட்டது. இந்த மாநாட்டில், நிதி மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னாக, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு, பொருளாதார வல்லுநர் மாண்டெக் சிங் அலுவாலியா, உலக வங்கியின் தெற்கு ஆசியாவிற்கான பிராந்திய பயிற்சி இயக்குநர் டாக்டர் டினா உமலி டெனிஞ்சர், ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் இந்தியாவிற்கான தலைவர் பாலகிருஷ்ண பிசுபதி, முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் ஸ்ரீ நிவாஸ் ரெட்டி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் முனைவர் எம். ஜெயந்தி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத், தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கத்தின் தலைமைத் திட்ட இயக்குநர் தீபக் எஸ். பில்கி. தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி மகளிர் பொறுப்பாளர்களுக்கு வெல்லும் தமிழ்ப் பெண்கள் பயிற்சி பாசறை கூட்டம் ஆத்தூரில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி., கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகள் மற்றும் செயல் திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துரைத்து தேர்தல் பரப்புரை மேற்கொள்ள வேண்டும் என ஆலோசனை வழங்கி உரையாற்றினார். இதில் தே.மலையரசன் எம்.பி. ஒன்றிய செயலாளர்கள் டாக்டர் வே.செழியன், இரா. வரதராஜன், மூர்த்தி , மருதமுத்து , சிவராமன், நகர செயலாளர்கள் கே.பாலசுப்பிரமணியம், ஏ.ஜி. ராமச்சந்திரன், வேல்முருகன், முத்துலிங்கம், உள்ளிட்ட மகளிர் கலந்து கொண்டனர்.








# தி.மு.க. இளைஞர் அணி

## சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி மன்றம் திறப்பு விழா

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

மாவட்டம், மாநகரம், மாநிலம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகிய கழக அமைப்புகளில், இளைஞர் அணிக்கு ஏற்கெனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகள், நகர–பகுதி–பேரூர்–வட்டங்கள் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, கழக இளைஞர் அணியை விரிவுபடுத்தும் விதமாக, கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக் கழக ஒப்புதலுடன், தி.மு.க. இளைஞர் அணி மன்றங்கள் திறக்கப்பட உள்ளன. முதற்கட்டமாக, சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிக்கான 30 இளைஞர் அணி மன்றங்கள், வரும் 19.02.2026 அன்று மாலை திறக்கப்பட உள்ளன. அதன் விவரம் வருமாறு.

**19.02.2026 வியாழக்கிழமை, நேரம் : மாலை 5 மணி**

| வ.எண் | மன்ற பதிவு எண் | மன்ற பெயர் / இடம் | கழக வட்டம் |
|---|---|---|---|
| 1 | DMKYW/TL001/2026 | **மேற்கு நமச்சிவாயபுரம் மன்றம்**<br>மேற்கு நமச்சிவாயபுரம், சூளைமேடு, சென்னை – 600094 | |
| 2 | DMKYW/TL002/2026 | **கிழக்கு நமச்சிவாயபுரம் மன்றம்**<br>கிழக்கு நமச்சிவாயபுரம், சூளைமேடு, சென்னை – 600094 | |
| 3 | DMKYW/TL003/2026 | **அபித் நகர் மன்றம்**<br>அபித் நகர், சூளைமேடு, சென்னை – 600094 | 109 |
| 4 | DMKYW/TL004/2026 | **வடஅகரம் மன்றம்**<br>வடஅகரம், சூளைமேடு, சென்னை – 600094 | |
| 5 | DMKYW/TL005/2026 | **திருவள்ளூர்புரம் மன்றம்**<br>திருவள்ளூர்புரம், சூளைமேடு, சென்னை – 600094 | |
| 6 | DMKYW/TL006/2026 | **தெற்கு கங்கை அம்மன் கோயில் தெரு மன்றம்**<br>தெற்கு கங்கை அம்மன் கோயில் தெரு, சூளைமேடு, சென்னை–600094 | |
| 7 | DMKYW/TL007/2026 | **அருணாச்சலம் நகர் மன்றம்**<br>அருணாச்சலம் நகர், சூளைமேடு, சென்னை – 600094 | |
| 8 | DMKYW/TL008/2026 | **வணிகர் தெரு மன்றம்**<br>வணிகர் தெரு, சூளைமேடு, சென்னை – 600094 | 109 (அ) |
| 9 | DMKYW/TL009/2026 | **பஜனை கோயில் தெரு மன்றம்**<br>பஜனை கோயில் முதல் தெரு, சூளைமேடு, சென்னை – 600094 | |
| 10 | DMKYW/TL010/2026 | **ஸ்ரீராமபுரம் மன்றம்**<br>ஸ்ரீராமபுரம் முதல் தெரு, சூளைமேடு, சென்னை – 600094 | |
| 11 | DMKYW/TL011/2026 | **ஜெயலட்சுமிபுரம் மன்றம்**<br>ஜெயலட்சுமிபுரம் பிரதான சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600034 | |
| 12 | DMKYW/TL012/2026 | **வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை மன்றம்**<br>வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை–600034 | |
| 13 | DMKYW/TL013/2026 | **சொக்கட்டான் சாலை மன்றம்**<br>சொக்கட்டான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600034 | 110 |
| 14 | DMKYW/TL014/2026 | **அப்பாசாமி தெரு மன்றம்**<br>அப்பாசாமி தெரு, சேத்துப்பட்டு, சென்னை – 600031 | |
| 15 | DMKYW/TL015/2026 | **பொன்னங்கிபுரம் மன்றம்**<br>பொன்னங்கிபுரம், நுங்கம்பாக்கம், சென்னை – 600034 | |
| 16 | DMKYW/TL016/2026 | **வள்ளுவர் குடியிருப்பு மன்றம்**<br>வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600034 | |
| 17 | DMKYW/TL017/2026 | **புஷ்பா நகர் (ராமலிங்க சுவாமி கோயில்) மன்றம்**<br>ராமலிங்க சுவாமி கோயில் அருகில், நுங்கம்பாக்கம், சென்னை – 600034 | |
| 18 | DMKYW/TL018/2026 | **காமராஜபுரம் மன்றம்**<br>காமராஜபுரம் 4–வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை – 600034 | 110 (அ) |
| 19 | DMKYW/TL019/2026 | **வைகுண்டபுரம் மன்றம்**<br>வைகுண்டபுரம் 2–வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை – 600034 | |
| 20 | DMKYW/TL020/2026 | **புஷ்பாநகர் பிரதான சாலை மன்றம்**<br>புஷ்பாநகர் பிரதான சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600034 | |
| 21 | DMKYW/TL021/2026 | **சூளைமேடு நெடுஞ்சாலை மன்றம்**<br>சூளைமேடு நெடுஞ்சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600024 | |
| 22 | DMKYW/TL022/2026 | **சௌராஷ்டிரா நகர் 9–வது தெரு மன்றம்**<br>சௌராஷ்டிரா நகர் 9–வது தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600024 | |
| 23 | DMKYW/TL023/2026 | **வரதராஜபேட்டை பிரதான சாலை மன்றம்**<br>வரதராஜபேட்டை பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600024 | 112 |
| 24 | DMKYW/TL024/2026 | **புலியூர் 1–வது தெரு மன்றம்**<br>புலியூர் 1–வது தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600034 | |
| 25 | DMKYW/TL025/2026 | **ஜக்காரியா குடியிருப்பு மன்றம்**<br>ஜக்காரியா குடியிருப்பு பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை–600024 | |
| 26 | DMKYW/TL026/2026 | **டிரஸ்ட்புரம் 8–வது தெரு மன்றம்**<br>டிரஸ்ட்புரம் 8–வது தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600024 | |
| 27 | DMKYW/TL027/2026 | **வள்ளலார் தெரு மன்றம்**<br>வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600024 | |
| 28 | DMKYW/TL028/2026 | **தயாள் நகர் பிரதான சாலை மன்றம்**<br>தயாள் நகர் பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600024 | 112 (அ) |
| 29 | DMKYW/TL029/2026 | **டிரஸ்ட்புரம் 7–வது தெரு மன்றம்**<br>டிரஸ்ட்புரம் 7–வது தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600024 | |
| 30 | DMKYW/TL030/2026 | **சிவன் கோயில் தெரு மன்றம்**<br>சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600024 | |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 17.02.2026

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி